குறுக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம் 1.49PM

அ.வ.எண் 24/2014 நாள் 04.01.20201 பெரியதம்பி, த/பெ.ராமகோனார்

DW2

**7 மற்றும் 11ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சூரியமூர்த்தி வகையறா தாக்கல் செய்துள்ள வழக்கின் சர்வே எண் 70ல் 4 ஏ. எத்தனை அயிட்ட சொத்திற்கு வழக்கு என்றால் 2 அயிட்டத்திற்கு. 2வது அயிட்ட சொத்தின் சர்வே எண். 70ல் 4 பி. மொத்த விஸ்தீரணம் 36 செண்டு. நான்கெல்லை கிழக்கே குப்பு சாமி கோனார், க.ரெங்கசாமி கோனார் தெற்கே ராமகோனார், சிதம்பர கோனார்,மேற்கே ராமகோனார், முத்துசாமி கோனார், வடக்கே ரோடு. சிதம்பரம் யாரிடம் எவ்வளவு கிரயம் வாங்கினார் என்றால் மீ.கருப்ப கோனார் மகன் பெரியதம்பியிடம் 3 1/2 செண்டு கிரயம் வாங்கினார். பாகமாக கிடைத்தது 6 செண்டு. நான் 7ம் எதிர்வாதி சிதம்பரம் என்பவரிடம் 4 1/2 செண்டு 17.07.2013ல் கிரயம்வாங்கியுள்ளேன். மேற்படி கிரயம் 7 மற்றும் 11ம் பிரதிவாதி சேர்ந்து எழுதி கொடுத்தது என்றால் சரிதான். நான் கிரயம் வாங்கியதற்கு முன்பு சிதம்பரம் அனுபவித்து வந்து தற்போது நான் அனுபவிக்கிறேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் வாதியின் அனுபவம் பற்றி எனக்கு எவ்வளவு நாளாக தெரியும் என்றால் நான் வாதிக்கு பக்கத்து வீட்டில் வசிப்பதால் எனக்கு விவரம் தெரிந்த நாள்முதல் 45 வருடமாக தெரியும். வாதி சூரியமூர்த்தி தாவா சொத்தை யாருக்கு கிரயம் கொடுத்தார் என்றால் குப்பு சாமி மகன் கருப்பையனுக்கு 4 செண்டு இடத்தை 17.07.2013ல் கிரயம் கொடுத்தார். கிரயம் போக மீதம் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்றால் 2செண்டு இருக்கும். தாவா சொத்தில் வாதிக்கு எவ்வித பாத்தியமும் அனுபவமும் கிடையாது என்றாலும் தாவா சொத்து 7 மற்றும் 11வது எதிர்வாதிக்கு உரிமையும் பாத்தியமும் உடையது என்றால் சரியல்ல.

12,13வது பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

இத்துடன் குறுக்கு விசாணை முடிக்கப்பட்டது.
குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 2.01 PM

Sd/- பெரியதம்பி,

*Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- P. Rangeswari

District Munsif, Pattukkottai,